ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 1829/30 - 2013 සැප්තැම්බර් 25 වැනි බදාදා - 2013.09.25
*1829/30 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 25 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

5 ஆம் பிரிவின் படியான பிரகடனம்

கீழ்க்காணும் காணி ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதாய் இருக்கின்றதென்றும் காணி கொள்ளும் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அது எடுத்துக்கொள்ளப்படுமென்றும் காணி எடுத்தற் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் காணி, காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக பண்டார தென்னகோன் ஆகிய நான் இத்தால் பிரகடனம் செய்கின்றேன்.

கேகாலை மாவட்டத்தில், கலிகமுவ பிரதேச செயலாளர் பிரிவில், பெலிகல் கோரளை சிறு பிரிவில், ஹொலொம்புவ எனும் கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட கேஈ/ஜீஎல்ஜீ/2012/145 மற்றும் 2012.12.28 ஆந் திகதி கொண்ட சுவட்டு வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மொத்த அளவில் ஏறக்குறைய 0.0533 ஹெக்டயார் அளவிலான கீழே குறிப்பிடப்பட்டுள்ள பெயர்கள் மற்றும் அளவுகளிலான இரண்டு காணித்துண்டுகளுக்கான (02) எல்லைகள் :

*01.* **துண்டு 'ஏ' - வராமுல்ல ஓவிடவத்த - விஸ்தீரணம் : 0.0272 ஹெக்டயார்**

வடக்கு : வீதி (பிரதேச சபை) ; கிழக்கு : துண்டு பீ ; தெற்கு : குருகொட ஓயா ; மேற்கு : வராமுல்ல ஓவிட வத்த.

*02.* **துண்டு 'பீ' - மஹவலபல்ல வத்த - விஸ்தீரணம் : 0.0261 ஹெக்டயார்**

வடக்கு : வீதி (பிரதேச சபை) ; கிழக்கு : மஹவல்பல்ல வத்த ; தெற்கு : குருகொட ஓயா ; மேற்கு : துண்டு ஏ.

ஜனக பண்டார தென்னகோன்,
காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்.

குறிப்பு இல. : 4/3/6/2012/எச்டபிள்யூ/145.
பிர செ குறிப்பு இல. : 120/13/01/53.
"மிஹிகத மெதுர",
காணிகள் செயலகம்,
ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2013.07.26.

10 - 256